# புற்று நோயாளர்களைப் பராமரிப்பதில் கிழக்கு புற்றுநோயாளர் பராமரிப்பு நிலையத்தின் பங்களிப்புக்கள்: ஒரு விசேட ஆய்வு

## Role of Eastern Cancer Care Hospice Treating Cancer Patients: A Special Research

M.L. Mohamed Helfan[1] & S.M.M. Mazahir[2]

[1] MOH Office, Padavisripura
[2]Faculty of Islamic Studies & Arabic Language, South Eastern University of Sri Lanka
mlhelfan@gmail.com

## ஆய்வுச் சுருக்கம்

புற்றுநோயினால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி கைவிடப்பட்டு ஒதுக்கப்படும் நோயாளிகளையும், சிகிச்சைக்காக தூர இடங்களிலிருந்து வருகை தரும் நோயாளிகள் தங்குவதற்காகவும் மனிதாபிமான அடிப்படையில் உதவுவதற்கு முஸ்லிம் கல்விமான்கள், தனவந்தர்கள் மற்றும் சமூக அமைப்புக்கள் முயற்சி எடுத்து, Eastern Cancer Care Hospice என்ற பெயரில் ஏறாவூரில் 2015ஆம் ஆண்டு உருவாக்கியமையானது இருசாராரினதும் வாழ்விலும் பாரிய முன்னேற்றம் ஏற்பட வழியேற்பட்டுள்ளது. இவ்விருசார் நோயாளிகளுக்காக இந்நிலையம் மேற்கொள்ளும் பங்களிப்பை கண்டறிவதோடு, சேவை நாடியின் திருப்தி நிலையை மதிப்பிடுவதை நோக்கமாகக் கொண்டு இவ்வாய்வு அமைந்துள்ளது. பண்பு ரீதியில் அமைந்த இவ்வாய்வு நேரடி அவதானம் மற்றும் நிருவாகிகள், நோயாளிகள் உள்ளடங்களாக பத்து நபர்களிடம் நேர்காணல் மேற்கொள்ளப்பட்டு, தகவல்கள் பெறப்பட்டுள்ளன. பெறப்பட்ட தகவல்கள் குறிமுறை அடிப்படையில் பகுப்பாய்வு செய்யப்பட்டு, முடிவுகள் பெறப்பட்டன. பொருத்தமான காற்றோட்டமுள்ள கடற்கரையை அண்டிய இடத்தில் இந்நிலையம் அமைந்துள்ளதோடு, நோயாளிகளின் தன்மைக்கேற்ப தங்குமிட வசதிகள் அதி நவீன முறையில் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன. மேலும் விடுதியில் தங்கும் நோயாளிகள் மற்றும் அவர்களுடன் உதவிக்காக இருப்பவர்களுக்கு நிலையத்தில் இயற்கையான முறையில் அதிவிசேடமாக உற்பத்தி செய்யப்பட்ட, அதிக போசனைச்சத்தைக் கொண்ட உணவுகள் இலவசமாக வழங்கப்படுகின்றன. புற்றுநோயியல் நிபுணரின் கண்காணிப்பில் நோயாளிகள் இருப்பதோடு, ஏனைய நோய்களுக்கான சிகிச்சைக்காக பல வைத்தியர்கள் இலவச சேவையை வழங்குகின்றனர். அவசர நிலையில் உள்ள நோயாளிகளின் மேலதிக சிகிச்சைக்குச் கொண்டு செல்வதற்காக அதிசொகுசு மருத்துவ ஊர்தி (Ambulance) எந்நேரத்திலும் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது. நோயாளிகளின் பொழுது போக்கிற்காக இயற்கை தோட்டம் தயார்படுத்தப்பட்டுள்ளது என்பன இவ்வாய்வின் கண்டுபிடிப்புகளாகும். அத்தோடு இத்தகைய அரவணைப்பினால் நோயாளிகள் திருப்தி அடைந்துள்ளதோடு அவர்களின் நன்றியை பல வழிகளிலும் பகிர்ந்து கொள்கின்றனர். இத்தனை வசதிகளுக்குமான உதவிகள் முஸ்லிம் தனவந்தர்களிடமிருந்து மாத்திரமே பெறப்படுவது மனிதாபிமானத்தின் உயர்ந்த நிலையை எடுத்துக்காட்டுகின்றது. இந்நிலையம் மேலும் வளம் பெறுவதற்கான பரிந்துரைகளும் இறுதியில் முன்வைக்கப்பட்டுள்ளன.

**திறவுச் சொற்கள்:** புற்றுநோயாளர்கள், புற்றுநோயாளர் பராமரிப்பு நிலையம், Eastern Cancer Care Hospice, பங்களிப்புக்கள்

## ஆய்வுப் பின்னணி

இறைவனால் படைக்கப்பட்ட படைப்பினங்களில் சிறப்பான படைப்பினமாக மனித சமூகம் நோக்கப்படுகின்றது. அவ்வினம் இப்பூவுலகில் வாழ்வதற்குரிய அனைத்து வசதிவாய்ப்புக்களும் இறைவனால் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. இதனால் உலகின் அனைத்து பாகங்களிலும் மனிதன் (தனிமையாக, குடும்பமாக, சமூகமாக) வாழ்ந்து வருகின்றான். இவ்வாறு வாழும் மனிதர்களை இறைவன் பல்வேறு அமைப்புக்களில் சோதித்துக் கொண்டு இருக்கின்றான். இதனைப் பற்றி இறைவன் புனித அல்குர்ஆனில் குறிப்பிடும் போது “*(விசுவாசங்கொண்டோரே!) பயம் மற்றும் பசியிலிருந்து ஏதாவது ஒன்றைக் கொண்டும், செல்வங்கள், உயிர்கள், கனிக(ளின் விளைச்சல்க)ள் ஆகியவற்றில் குறைவைக் கொண்டும் நிச்சயமாக நாம் உங்களைச் சோதிப்போம்: மேலும், (நபியே! இவற்றைப்) பொறுத்துக் கொள்பவர்களுக்கு நீர் நன்மாராயங் கூறுவீராக! (அல்குர்ஆன்: 02: 155)*

இவ்வாறான சோதனைகளில் உயிர் ஆபத்துக்களை ஏற்படுத்துகின்ற பாரிய நோய்கள் மனித சமூகத்தில் பரவிக் காணப்படுகின்றன. பொதுவாக நோய்கள், மிகவிரைவில் குணமடையக் கூடியதாகவும் இன்னும் சில உயிர் ஆபத்துக்களை ஏற்படுத்தக் கூடியதாகவும் இருக்கின்றன. குறிப்பாக மனித உயிர்களை காவு கொள்கின்ற நோய்களில் புற்று நோய் பிரதான இடத்தைப் பெற்றுள்ளது.

மனித உடம்பில் நோய் எதிர்ப்பு சக்தி குறைவாக இருக்கின்ற போது சில தேவையற்ற அணுக்கள் அழிக்கப்படாமல் தொடர்ச்சியாக உடலில் இருந்து கொண்டே இருக்கிறது. இது போன்ற அழிக்க முடியாத அணுக்கள் புற்று நோய் செல்களாக மாறி, மனித உயிருக்கு அச்சுறுத்தல்களை ஏற்படுத்திவிடுகின்றன. இலங்கையில் ஆண்டுதோறும் புதிதாக 17 ஆயிரம் புற்று நோயாளர்கள் இனங்காணப்படுவதோடு, அவற்றில் 2500 பேர் மார்பக புற்று நோயினால் பாதிக்கப்பட்டுள்ளார்கள். மேலும் இவர்கள் 45 வயது தொடக்கம் 60 வயது வரையிலான பெண்கள் என சுகாதாரப் பிரிவு கூறுகின்றது. வருடத்தில் 13 ஆயிரம் பேர் இந்நோயினால் இறப்பதாகவும் மேற்படி பிரிவு கூறுகின்றது (அல்விஸ், சமரவீர, 2017).

1985ஆம் ஆண்டு 4,416 ஆக இருந்த புற்று நோயாளர் இறப்பு 2005ஆம் ஆண்டு 9,403 ஆக அதிகரித்துள்ளதோடு, 2009ஆம் ஆண்டு 11,286 ஆக அதிகரித்துள்ளது (பெரேரா, 2017).

இலங்கை அரசு இப்புற்றுநோயைக் குறைப்பதற்கான காத்திரமான பல்வேறு செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது. குறிப்பாக வைத்தியசாலைகளில் புற்று நோய் விழிப்புணர்வு மற்றும் சிகிச்சை மையங்களை உருவாக்கி உள்ளமை விஷேட அம்சமாகும். நாடு பூராகவும் இது தொடர்பான சுமார் 800 நிலையங்கள் இயங்கி வருகின்றன. இந்நோயினால் பாதிக்கப்படுகின்ற மற்றும் இதற்கான அறிகுறி உள்ளவர்கள் இந்நிலையங்களினூடாக சிகிச்சை பெறவும், ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ளவும் வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன (சமரவீர, 2017).

சிறந்த உணவுப் பழக்கவழக்கங்கள் மற்றும் சுகாதார நடைமுறைகள் என்பனவற்றை பேணுவதன் அவசியத்தை வலியுறுத்தி, அதற்கான வழிகாட்டல்களை வழங்கியதில் இஸ்லாத்திற்கும் பெரும் பங்குண்டு. அவ்வாறே நோய் ஏற்பட்டால் அதற்கான சிகிச்சைகளைப் பெற்றுக் கொள்ளுமாறும் அது வலியுறுத்தியுள்ளதை பின்வரும் திருமறை வசனம் எடுத்துக்காட்டுகின்றது.

*''மலைகளிலும், மரங்களிலும், உயர்ந்த கட்டடங்களிலும் நீ கூடுகளை அமைத்துக்கொள் என உமது இறைவன் தேனிக்கு உள்ளுணர்வை அளித்தான். பின் நீ எல்லா விதமான கனிகளில் இருந்தும் உணவருந்தி உன் இறைவன் காட்டித்தரும் எளிதான வழிகளில் (உன் கூட்டுக்குள்) ஒடுங்கிச் செல் என்ற உள்ளுணர்வையும் ஏற்படுத்தினான். அதன் வயிற்றிலிருந்து பல நிற வர்ணங்களை உடைய ஒரு பாணம் (தேன்) வெளியாகிறது அதில் மனிதர்களுக்கு நோய் நிவாரணியுண்டு''* (அல்குர்ஆன்: 16: 68-69)

எனினும் நோய் ஏற்படாமல் இருப்பதற்கான வழிகாட்டல்களை மார்க்கங்கள் மற்றும் சுகாதார அமைப்புக்கள் மேற்கொண்ட போதிலும் நோய் மனிதனை விட்டுவிடுவதாகத் தெரியவில்லை. இவ்வாறான பின்னணியில் புற்றுநோயினால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி கைவிடப்பட்டவர்களுக்காகவும் தூர இடங்களிலிருந்து மட்டக்களப்பு மாவட்ட வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக வருகின்ற நோயாளர்கள் தங்கி செல்வதற்காகவும் *Eastern Cancer Care Hospice என்ற பெயரில் ஏறாவூரில் 2015ஆம் ஆண்டு* அமைக்கப்பட்டு, இயங்கி வருகின்றது. இது கிழக்காசியாவில் பெரும் செல்வாக்கை பெற்றதாகவும், இலங்கையில் முதன்மையான தரத்தைப் தன்னகத்தே கொண்டதாகவும் விளங்குகின்றது. (நேர்காணல்: நூஹு லெப்பை, 2020)

எனவே, புற்றுநோயாளர்களை பராமரிப்பதில் இந்நிலையத்தின் பங்களிப்பை மதிப்பிடுவதாக இவ்வாய்வு அமைகின்றது.

**ஆய்வுப் பிரச்சினை**

மட்டக்களப்பு மாவட்டத்தில் புற்றுநோயாளர் வைத்தியசாலை அமையப்பெற்றுள்ள போதிலும் பராமரிப்பு நிலையங்கள் (Hospice) அமையப் பெற்றிருக்கவில்லை. இதனால் இந்நோயினால் பாதிக்கப்பட்டு கைவிடப்பட்டவர்கள் மற்றும் தூர இடங்களிலிருந்து சிகிச்சைக்காக வருகின்ற நோயாளிகள் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்கின்றனர். இத்தகைய நோயினால் பாதிக்கப்பட்ட நோயாளிகளின் நோக்கங்கள் மற்றும் தேவைகளை நிறைவேற்றும் விதத்தில் இந்நிலையம் செயற்படுகின்றதா என்ற வினாவுக்கு விடைகாண்பதாக இந்த ஆய்வு அமைந்துள்ளது.

**ஆய்வின் நோக்கம்**

இந்நிலையத்தின் (ECCH) பங்களிப்பை கண்டறிவதோடு, சேவை நாடியின் திருப்தி நிலையை மதிப்பிடுதல்

**ஆய்வு முறையியல்**

பண்பு ரீதியான முறையில் அமைந்த இவ்வாய்வு முதலாம், இரண்டாம் நிலைத் தரவுகளை மையப்படுத்தியதாகும். புற்றுநோயாளர் பராமரிப்பு நிலையத்தின் நிருவாகிகளிடம் இது தொடர்பான பங்களிப்புக்கள் பற்றியும், அங்கு தங்கி சிகிச்சை மேற்கொள்ளும் நோயாளர்களின் அவர்கள் பெறும் சேவை திருப்தி நிலை தொடர்பாகவும் பத்து பேரிடம் நேர்காணல் மேற்கொள்ளப்பட்டு, அவற்றின் மூலம் தரவுகள் சேகரிக்கப்பட்டன. ஆய்வுக்கான கோட்பாட்டு அமைப்புத் திட்டத்தை நிறுவுவதற்காக வேண்டி இரண்டாம் நிலைத்தரவுகளான புத்தகங்கள், ஆய்வுக் கட்டுரைகள், அறிக்கைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. கிடைக்கப் பெற்ற தகவல்கள் குறிமுறை அடிப்படையில் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன.

**இலக்கிய மீளாய்வு**

நாம் மேற்கொண்ட இவ்வாய்வுத் தலைப்பு தொடர்பில் ஆய்வுப் பிரதேசத்தில் இதுவரை எவ்வித ஆய்வுகளும் மேற்கொள்ளப்படவில்லை. இருந்தபோதிலும் இவ்வாய்வுக்கு உறுதுணையாக கீழ் குறிப்பிடப்படும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டிருப்பதை அவதானிக்க முடிந்தது.

Michael H. Leavy, (1993), “Living with cancer: Hospice / Palliative care”, JNCI Journal of the national cancer institute, 85(16):1283-7. இந்த ஆய்வில் புற்றுநோய்க்கான அறிகுறி, அதற்கான சிகிச்சை முறை பற்றி ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இருந்தபோதிலும் எமது ஆய்விலிருந்து இது வேறுபட்டுச் செல்கின்றது.

**கலந்துரையாடலும், பிரதான கண்டறிதல்களும்**

**அமைவிடம்**

கிழக்கு மாகாணத்தின் மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏறாவூர் நகரத்தின் பிரதான வீதியிலிருந்து சுமார் 2.4 கி.மீ. தூரத்தில் இது அமைந்துள்ளது. இதனால் இன, மத வேறுபாடின்றி இந்நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் இலகுவாக வருகைதந்து எவ்வித கட்டணமுமின்றி (தங்கவும் கைவிடப்பட்டவர்கள் ஓய்வு பெறவும்) சேவை பெறும் வகையில் அமைக்கப்பட்டுள்ளதை அறிய முடிகிறது. மேலும் சுத்தமான காற்றை சுவாசிக்கக் கூடிய அமைப்பில் கடற்கரையை அண்மித்த பகுதியில் அமைக்கப்பட்டமை சிறப்பம்சமாகும்.

மேலும் மாவட்ட புற்றுநோய் வைத்தியசாலை மட்டக்களப்பில் அமைந்துள்ளதால் இலகுவாக சிகிச்சை பெற்று மீண்டும் இந்நிலையத்திற்கு திரும்பும் அமைப்பில் மட்டக்களப்பு மாவட்ட வைத்தியசாலையிலிருந்து 14 கி.மீ. தூரத்தில் இந்நிலையம் அமையப்பெற்றுள்ளமையானது சேவைநாடியின் பொருளாதாரச் சுமையைக் குறைப்பதாக உள்ளது.

**நோயாளிகள் பற்றிய தகவல்கள்**

இந்நிலையத்தில் சிங்கள, தமிழ், முஸ்லிம் மற்றும் கிறிஸ்தவ சமூகத்தைச் சேர்ந்த சுமார் 18 பேர் சேவை பெறுகிறார்கள். (இத்தொகை தற்போதுள்ள நோயாளர்களின் எண்ணிக்கையாகும். இத்தொகை நோயாளர்களின் வருகையைப் பொருத்து மாற்றம் அடையும்) இவர்களில் பெண்கள் 12 பேரும் ஆண்கள் 06 பேரும் உள்ளமை குறிப்பிடத்தக்க அம்சமாகும். இவர்கள் அம்பாரை, திருகோணமலை, பொலன்னறுவை, பதுளை, கண்டி மாவட்டங்களை சேர்ந்தவர்களாக உள்ளார்கள். இவர்கள் பெரும்பாலும் 30 வயது தொடக்கம் 74 வயதிற்குட்பட்டவர்களாகவர்.

**நோயாளிகளின் வகைகள்**

இங்கு இரண்டு வகையான நோயாளிகள் இருப்பதை அவதானிக்க முடிந்தது. ஒரு வகுப்பினர் புற்றுநோயினால் பாதிக்கப்பட்டு, சிகிச்சை பலனின்றி, ஓய்வு பெற்று காணப்படுபவர்கள் மற்றையவர்கள் புற்றுநோயினால் பாதிக்கப்பட்டு, தொடர்ந்து சிகிச்சைக்காக மட்டக்களப்பு புற்றுநோய் வைத்தியசாலைக்கு வருபவர்கள்.

**நோயாளிகளுக்கான வசதிகள் மற்றும் சேவைகள்**

புற்றுநோயினால் பாதிக்கப்பட்டு, சிகிச்சை பலனின்றி, கைவிடப்பட்ட நோயாளிகள் தங்கி ஓய்வு பெறுவதற்காக வேண்டி அதி நவீன வசதிகளை கொண்ட அறைகள் (அதி நவீன உணவகங்களின் (Hotel) தரத்தைப் போன்று) வழங்கப்பட்டுள்ளன. அத்துடன் நோயாளிகளின் உதவிக்காக வருபவர்கள் தங்குவதற்கும் ஏற்பாடுகள் அங்கு செய்யப்பட்டுள்ளன.

புற்றுநோய் சிகிச்சைக்காக தொலைவிடங்களிலிருந்து வருகை தருபவர்கள் தொடர்ச்சியாக ஒன்றறை மாதங்கள் சிகிச்சை பெறவேண்டிய தேவை உள்ளதால் சிகிச்சை பெற்றுக் கொண்டு ஒவ்வொரு நாளும் தமது சொந்த ஊருக்கு சென்று வருவது சிரமமாகும். இதனால் இவர்களின் சிரமத்தை கருத்தில் கொண்டு இந்நிலையத்தில் தங்கி சிகிச்சைக்காக சென்று வருவதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

சுமார் 100 நோயாளிகளை பராமரிக்கும் விதத்தில் இந்நிலையம் அமைக்கப்பட்டுள்ளமை தூர இடங்களிலிருந்து தேவைநாடி வரும் நோயாளிகள் சிரமங்களை எதிர்நோக்குவதிலிருந்து விடுபடுவதற்கான சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. இந்நிர்மாணத்திற்கான செலவுகளையும் தனவந்தர்கள் பொறுப்பேற்றமை குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

நோயாளிகளை கவனிப்பதற்காக இத்துறையில் நிபுணத்துவம் பெற்ற புற்றுநோய் வைத்திய நிபுணர் ஒருவருடன் ஏனைய வைத்தியர்கள், தாதியர்கள் நியமிக்கப்பட்டமை நோயாளர்கள் எவ்வித அச்சமுமின்றி தமது சிசிச்சைகளை மேற்கொள்ளக் கூடியதாக உள்ளது. இங்கு வைத்தியர்கள் தங்கள் சேவைக்காக எவ்வித கட்டணமும் அறவிடாமை மனிதாபிமானத்தின் உயர்வை வெளிக்கொணர்கின்றது.

நோயாளிகளை மாவட்ட புற்றுநோய் வைத்தியசாலைக்கு கொண்டு செல்வதற்கான தேவை ஏற்படும் சந்தர்ப்பத்தில் அவர்களை மிகவும் விரைவாக கொண்டு செல்வதற்கான அதி நவீன வசதிகளைக் கொண்ட மருத்துவ ஊர்தி (Ambulance) எந்நேரமும் தயார் நிலையில் உள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

நோயாளிகளின் ஆரோக்கியத்தைக் கருத்திற் கொண்டு அவர்கள் தங்கி இருக்கும் வளாகம் முழுவதுமாக இயற்கை பயிர்களை கொண்டு அமைந்துள்ளது. சுமார் 400 பழ மரங்கள் நடப்பட்டுள்ளதோடு, இந்நிலையத்தில் உற்பத்தி செய்யப்பட்ட அதி போசனை கொண்ட உணவுகள் இலவசமாக வழங்கப்படுகின்றன.

தங்கி சிகிச்சை பெறுபவர்கள் எவ்வித கட்டணமுமின்றி சேவை பெறுவதோடு, மாதாந்தம் ஏற்படுகின்ற ஒரு இலட்சம் செலவையும் உள்ளூர் வெளியூர் முஸ்லிம் கல்விமான்கள், தனவந்தர்கள் மற்றும் சமூக அமைப்புக்கள் பகிர்ந்து கொள்வதை கண்டறிய முடிந்தது. இவ்விடயத்தில் கல்விமான்கள், தனவந்தர்கள் மற்றும் சமூக அமைப்புக்கள் தமது அவதானத்தை செலுத்தியமை சமூகப்பற்றை வெளிக்காட்டுகின்றது.

**நோயாளிகளின் திருப்தி நிலை**

நோயாளிகளின் சேவை திருப்தி நிலையை நோக்கும் போது தங்கி இருக்கின்ற அனைத்து நோயாளிகளும் பூரண திருப்தி நிலையை அடைந்திருப்பதாக நேர்காணலின் போது அறிய முடிந்தது.

தங்கி இருக்கும் நோயாளிகளை பார்வையிடுவதற்காக வைத்திய குழாம் (வைத்தியர், தாதியர்) உரிய நேரத்திற்கு வருகை தந்து தமக்கான பரிசோதனை மற்றும் பராமரிப்பு விடயங்களை மேற்கொள்வதில் தமது பங்காற்றுதலை மேற்கொள்கிறார்கள் என்பதை நோயாளிகளிடம் நேர்காணலின் போது அறிய முடிந்தது.

நோயாளிகளிடம் அந்நிறுவன ஊழியர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் மிகவும் அன்பாகவும், பணிவாகவும் தமக்குரிய பணியைச் செய்கின்றார்கள் என்பதை நேர்காணல் மற்றும் அவதானத்திலிருந்து அறிய முடிந்தது.

தமது சொந்த வீட்டில் இருக்கும் நிம்மதி, அரவணைப்பைப் பார்க்கிலும் பல மடங்கு நிம்மதி இங்கு கிடைத்திருப்பதாக பயனாளிகள் தெரிவிப்பதை அறியக்கூடியதாக உள்ளது. அவர்கள் தமது நன்றி உணர்வை பல வழிகளிலும் (Media) தெரிவித்து வருகின்றனர்.

தூர இடங்களிலிருந்து தாங்கள் வருவதனால் மாவட்ட வைத்தியசாலைக்கு அண்மையில் இந்நிலையம் அமைந்துள்ள காரணத்தினால் பல்வேறு சிரமங்கள் குறைக்கப்பட்டுள்ளதாகவும் கருத்து வெளியிடுகின்றனர்.

எம்மைப் பார்வையிடுவதற்காக வருகின்ற உறவினர்கள் இது அமைந்துள்ள இடம், சுற்றுச் சூழல் மற்றும் இங்கு கிடைக்கும் சேவைகளைப் பார்த்து அவ்வுறவினர்கள் தங்கள் மீது கொண்ட கவலைகளை மறந்து விடுவதாகவும் அறியக்கிடைத்தது.

**பரிந்துரைகள்**

1. இவ்வாறான சேவைகளை தொடர்ந்து முன்னெடுத்தல்
2. இதனூடாக நாட்டில் இன நல்லுறவை பேணுவதற்கான வழிவகைகளை மேற்கொள்ளல்

3. இளைஞர்கள் நெறி பிறழ்ந்து செல்வதைத் தடுத்து இவ்வாறான நிலையங்கள் ஊடாக தொழில் பயிற்சிகளை வழங்குதல்
4. இந்நிலையம் தொடர்பான விழிப்புணர்வை பொது மக்கள் மத்தியில் ஏற்படுத்தி, அதனை தொடர்ந்து இயங்கச் செய்வதற்கான பொருளாதார மூலங்களை ஸ்தாபித்தல்
5. கைவிடப்பட்ட சிறுவர்களின் முன்னேற்றத்திற்கும் இவ்வாறான வசதிகளைக் கொண்ட நிலையங்களை அமைத்துக் கொடுப்பதன் மூலம் அவர்களின் எதிர்காலத்தை ஒளிமயமாக்க முன்வருதல்

**முடிவுரை**

இந்நிலையத்தின் முன்மாதிரியான செயற்பாடுகள் சமூக அங்கீகாரத்தைப் பெற்றுள்ளது. சமூகத்தில் இந்நோயினால் மனஅழுத்தத்திற்கும் பொருளாதார சிக்கலுக்கும் உள்ளாக்கப்பட்ட பல குடும்பங்களின் வாழ்வில் ஒளி ஏற்றப்பட்டுள்ளது. இதனால் சேவை பெறுனர் திருப்தி நிலை அதிகரித்துள்ளதோடு, மனக்கவலையும் குறைக்கப்பட்டுள்ளது. இந்நிலையத்தை முன்னுதாரணமாக கொண்டு, சமூகத்தில் பின்னடைவாக காணப்படுகின்ற ஏனைய துறைகளை அடையாளம் கண்டு, அவற்றை முன்னேற்றுவதற்கான பல நிலையங்களை நாடு முழுவதும் உருவாக்கி சேவை வழங்குவதன் மூலம் சிறந்த நற்பிரஜைகளை உருவாக்க கூடியதாக அமையும். அதற்கு உறுதுணையாக இந்நிலையத்தின் நிருவாக குழாம் தேவையான வழிகாட்டல்களை வழங்குவதற்கு முன்வரவேண்டும். இந்த அடிப்படையில் இந்த ஆய்வு, முஸ்லிம் சமூகத்தின் பர்ளு கிபாயா ஒன்றான நோயாளர்களுக்கு சிகிச்சை அளித்தல் எனும் அடிப்படையில் இந்நிலையத்தின் பங்கு அளப்பெரியது. இவ்வாறான துறைகளை மேலும் மேம்படுத்துவதற்கு முனையும் சமூக ஆர்வலர்களுக்கும், பொது அமைப்புக்களுக்கும் துணையாக இவ்வாய்வு அமையவல்லது.

**உசாத்துணைகள்**


BBC, (2017), "இலங்கை: புற்றுநோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு", [Online] available: http: www.bbc.com [accessed]: 2020.10.18

BBC, (2018.03.29), "உடல்பருமன், தாமதமாகும் திருமணம்: இந்திய பெண்களை புற்றுநோய் தாக்கும் காரணங்கள்" [Online] available: http: www.bbc.com [accessed]: 2020.10.18

ராமர், கோ. (2020.02.04), "இரைப்பை புற்றுநோயை தடுப்பது எப்படி", [Online] available: http: www.dailythanthi.com [accessed]: 2020.10.20

லதீப் கே.எம் (2004) "சுகத்தை நோக்கி: விதியை மதியால் வெல்வோம்", சாய்ந்தமருது: ரோயல் ஒப்செட் பிரின்டர்ஸ்

நிரூபன், (2019.08.25), ''மூன்றரை மணி ரேத்தில் புற்றுநோய் பாதிப்பை கண்டறியும் தொழிநட்பத்தை கண்டு பிடித்து இந்திய மருத்துவர்கள் சாதனை'' [Online] available: http: www.tamilnews.com [accessed]: 2020.10.20

நூர்தீன், எம்.எஸ்.எம். (2018), ''புற்றுநோயால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு கரம் கொடுப்போம்'', [Online] available: http: www.newsview.lk [accessed]: 2020.10.20

Michael H. Leavy, (1993), "Living with cancer: Hospice / Palliative care", *JNCI Journal of the national cancer institute,* 85(16):1283-7

**நேர்காணல்கள்**

றாஸிக் பரீட், வீ., முகாமையாளர், கிழக்கு புற்றுநோயாளர் பராமரிப்பு நிலையம், ஏறாவூர். (2020.11.07)

நூஹு லெப்பை, யூ., நிறைவேற்று உறுப்பினர், கிழக்கு புற்றுநோயாளர் பராமரிப்பு நிலையம், ஏறாவூர். (2020.11.07)

பைறூஸ், ஏ.சி., செயலாளர், கிழக்கு புற்றுநோயாளர் பராமரிப்பு நிலையம், ஏறாவூர். (2020.11.07)

தங்கியிருந்து சிகிச்சை பெறும் நோயாளிகள். (2020.11.07) (அந்தரங்கத்தன்மையைப் பாதிக்கும் என்பதால் அவர்களின் பெயர்கள் இங்கு குறிப்பிடப்படவில்லை.)